**சுருக்கம்**

பணியமைப்பு – இந்து சமய அறநிலையத் துறை, வேலூர் இணை ஆணையர் அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.கா.சுந்தரம், இளநிலை உதவியாளர் – விதித் தளர்வு செய்து சிறப்பு நேர்வாக 18 வயதினை நிறைவு செய்த நாளுக்கு அடுத்த நாளான 21.12.2014 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 229**

**நாள்: 17.07.2023**
**சோபகிருது வருடம், ஆடி —01**
**திருவள்ளுவர் ஆண்டு– 2054**

**படிக்கப்பட்டது:**

இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க.எண்.43492/2013/பி3, நாள் 16.03.2020, 28.10.2020, 29.10.2021, 09.02.2022, 26.05.2022 மற்றும் 13.02.2023.

**ஆணை:**

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், இந்து சமய அறிநிலையத்துறையில் வேலூர் இணை ஆணையர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்த திரு.கே.கார்த்தீபன் 30.07.2012 அன்று காலமானார் எனவும், அன்னாரின் மகன் திரு.கா.சுந்தரம், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 10.11.2014 முற்பகல் முதல் வேலூர் மண்டல தணிக்கை அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார் எனவும், அன்னாரின் தந்தை திரு.கே.கார்த்தீபன் (அமரர்) இயற்கை எய்திய நாளான 30.07.2012 அன்று திரு.கா.சுந்தரம், இளநிலை உதவியாளருக்கு 18 வயது முழுமை அடையவில்லை எனவும், அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2014 பத்தி 6(1)–ன்படி 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத இனங்களில் நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து உத்தரவிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் திரு.கா.சுந்தரம், இளநிலை உதவியாளருக்கு அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும்

வேலைவாய்ப்புத்துறை நாள் 03.08.1977 பத்தி 6ல் தெரிவிக்கப்பட்டுள்ள வயது குறித்த விதிகளுக்கு விலக்களித்து அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 10.11.2014 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தனது கடிதத்தில், தனியருக்கு இளநிலை உதவியாளராகப் 10.11.2014 முதல் பணி நியமனம் வழங்கப்பட்டு, 20.12.2014 அன்று தனியருக்கு 18 வயது பூர்த்தியாகும் நிலையில் 40 நாட்கள் முன்னதாக பணியில் சேர்ந்துள்ளதை சிறப்பு நேர்வாகக் கருதி அன்னார் 18 வயது பூர்த்தி அடைந்த பின்னர் 21.12.2014 அன்று பணி நியமனம் வழங்கப்பட்டதாகக் கருதி, அன்றைய தேதி முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் இனிவரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நிகழா வண்ணம் உரிய விதிகளைப் பின்பற்றி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்படும் என இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து வேலூர் மண்டல தணிக்கை அலுவலர் அலுவகத்தில் பணிபுரிந்து வரும் திரு.கா.சுந்தரம், இளநிலை உதவியாளர், குறும வயது நிறைவு செய்வதற்கு முன் பணி நியமனம் வழங்கப்பட்டதற்கு தனியரின் பொறுப்பு ஏதுமில்லாமல் தனியருக்கு பணிவரன்முறை செய்யப்படாமல் உள்ள நிலையிலும் தனியர் 10.11.2014 முதல் 8 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்துள்ள நிலையிலும் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி, திரு.கா.சுந்தரம் என்பவரது பணியை அவர் 18 வயதினை நிறைவு செய்த நாளுக்கு அடுத்த நாளான 21.12.2014 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக அவர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58ல் உள்ள அதிகாரத்தின்படி அச்சட்டத்தின் பிரிவு 20(6)(b) மற்றும் பிரிவு 28 (2) ஆகியவற்றை தளர்வு செய்தும், மேலும் குறும வயது குறித்து 23.01.2020 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.18 குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளிலிருந்து விலக்களித்தும், அன்னாரது பணியினை சிறப்பு நேர்வாக அவர் 18 வயதினை நிறைவு செய்த நாளுக்கு அடுத்த நாளான 21.12.2014 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தனியரது

ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை உள்ளிட்ட பணப்பயன்களை வழங்கிடவும் அரசு ஆணையிடுகிறது.

(**ஆளுநரின் ஆணைப்படி**)

**த.உதயசந்திரன்**
**முதன்மைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>
இயக்குநர்,
இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை சென்னை-18.
(திரு.கா.சுந்தரம் அவர்களின் அசல் பணிப்பதிவேட்டுடன்)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை சென்னை.34.
திரு.கா.சுந்தரம், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/35.
மாவட்டக் கருவூல அலுவலர்,வேலூர்.

<u>நகல்:-</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9
நிதி(அ.ந.மு.பல்வகை)த் துறை, சென்னை-9
இருப்பு கோப்பு / உதிரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

E. Rai 17/7/2023
**பிரிவு அலுவலர்.**